22nd November 1963]

களர் நிலங்களைச் சீர்படுத்தல்

* 471 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

களர் நிலங்களை உயர்நிலமாக்க விவசாயத் துறையினர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இத் தகைய திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. சி. ம. அம்பிகாபதி : இம்மாதிரிப்பட்ட களர் நிலங்கள் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை தஞ்சை ஜில்லாவிற்கும் விஸ்தரிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : தென்னாற்காடு மாவட்டத்தில் இப்போது இந்தத் திட்டம் நடத்தப்படுகிறது. இதில் வெற்றி ஏற்படுமானல், இந்தத் திட்டத்தை தஞ்சை ஜில்லாவிற்கும் விஸ்தரிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : களர்நிலங்களை சீர்திருத்துவது சம்பந்த மான திட்டத்தின் விவரங்கள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயி களுக்கு 50 சதமானம் கடனாகவும், 50 சதமானம் ஸப்ஸிடியாகவும் உதவி செய்ய அரசாங்க திட்டமிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : களர்நிலத்தை பக்குவப்படுத்து வதற்கு கரைகள் போடுவது, ஓடைகள் ஏற்படுத்துவது இம்மாதிரிப் பட்ட வேலைகளோடு நின்றுவிடுவதால் பிரயோசனமில்லை. ஆகவே நிரந்தரமான நடவடிக்கை எடுக்க சர்க்காரில் என்ன திட்ட மிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இவை மட்டுமல்ல, நல்ல விதைகள் ஜிப்சம் கொடுப்பது போன்ற திட்டமும் இருக்கிறது.

பீடித் தொழிலாளர் நிலை

* 472 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பீடி ஏற்றுமதி செய்து வந்ததை இலங்கை அரசாங்கம் தடைசெய்து தமிழகத்தில் பீடித்தொழில் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் வேலையின்றி கஷ்டப்படுவது அரசாங்கத் திற்கு தெரியுமா ?

[22nd November 1963

(இ) தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் இலங்கைக்கு பீடி ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) உள்நாட்டு பீடி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் இலங்கை சர்க்கார் இந்தியாவிலிருந்து பீடி இறக்குமதியை கணிசமாகக் குறைத்துவிட்டார்கள். இந்தியாவிலிருந்து வரும் பீடி இறக்குமதியை அதிகரிக்கும்படி இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காரைக் கேட்டுக்கொண்டனர். ஆனல் இலங்கை அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ள இயலாது என்று தெரிவித்துவிட்டது.

திரு. எம். எஸ். மணி : ஸார், இலங்கை பாராளுமன்றத்தில் அங்குள்ள பொது உடமைக்கட்சி அங்கத்தினர் ஒருவர் இந்தியாவிலிருந்து பீடிகள் இறக்குமதி செய்வதை தடை செய்ய வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்ததன் காரணமாகத்தான் இலங்கைக்கு பீடி அனுப்பப்படுவது தடை செய்யப்பட்டிருப்பதாக . . . . .

MR. SPEAKER : The question does not arise. இலங்கை பாராளுமன்றத்தில் என்ன நடந்தது என்பதைப்பற்றி இங்கு நாம் சொல்வது பொருத்தமல்ல.

திரு. எம். எஸ். மணி : இலங்கை அரசாங்கம் என்ன பாலிஸியை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் தெரிந்து கொண்டிருக்கிறதா என்பதைப்பற்றி அறிவதற்காகத்தான் . .

கனம் சபாநாயகர் : நம்முடைய அரசாங்கம் தெரிந்து கொண்டிடிருக்க வேண்டிய அவசியமில்லையே . . .

திரு. எம். எஸ். மணி : தெரிய வேண்டிய அவசியமில்லை என்றல் சரி, கேட்கவில்லை . . .

MR. SPEAKER : What has happened in another House and what a Member has stated there should not be referred to here. But the hon. Member can put the question in another form.

திரு. எம். எஸ். மணி : இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பீடி போகக்கூடாது என்று ஏதாவது தடை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அரசாங்கத்தில் என்ன செய்திருக்கிறர்கள் என்பது நமக்குத் தெரியாது. ஏற்றுமதி செய்யக்கூடாது என்ற தடை ஒன்றும் இல்லை. இப்போதும் 5 லட்சம் பவுன்ட் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கோசல்ராம் : பீடி உண்மையாக இலங்கைக்குப் போவது தடுக்கப்படாவிட்டாலும், 90 சதவிகிதம் பீடி போவது தடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் பீடிக்குத் தேவைப்

22nd November 1963]

படுகிற இலை, புகையிலைபோன்ற (ரா-மெட்டீரியல்ஸ்) மூலப்பொருள்கள் இந்தியாவிலிருந்துதான் கூடுதலாக அனுப்பப்படுகிறது. ஆகவே இந்த மூலப்பொருள்களை தடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய சட்டசபை விதிகளின்படி இந்த ராஜ்யத்திற்கு சம்பந்தப்பட்ட அல்லது இந்த அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் உள்ள நடவடிக்கைகளைப்பற்றி இந்த சட்டசபையில் கேள்விகளை கேட்கமுடியும். இப்போது கேட்டிருக்கும் கேள்வி மத்திய அரசாங்கத்தின்கீழ் இருப்பது. ஆகவே இக்கேள்வியை பார்லிமெண்டில்தான் போடவேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம் : இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா என்றுதான் கேட்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு அரசாங்கம் மற்றொரு அரசாங்கத்திற்கு இதுபோன்ற காரியங்களில் சிபாரிசு செய்வது என்பது வழக்கமல்ல. (திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் எழுந்திருந்தார்.)

Diploma Course in Law

* 473 Q.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons who sought admission for the Diploma Course in Law this year; and

(b) the number of persons admitted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 421.

(b) 240.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த டிப்ளமோ-கோர்ஸ் ஏற்படுத்தியிருப்பதின் நோக்கமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாம் பொதுவாக பொருளாதார வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். அதனால் வழக்குகள் எல்லாம் பல துறைகளில் பெருகிக்கொண்டிருக்கின்றன. வழக்கறிஞர்கள் பல துறைகளில் குறிப்பிட்ட அளவில் விசேஷமாக நிபுணர்களாக வரவேண்டும், அதற்கு இந்த கோர்ஸ் பயன்படும். முக்கியமாக கம்பெனி லா, பாங்கிங் லா, இன்ஷூரன்ஸ் லா, டாக்சேஷன் லா, லேபர் லா, அட்மினிஸ்ட்ரேஷன் லா, இம்மாதிரியான சட்டங்களில் எல்லாம் புதிதாக பட்டம் பெறுகிறவர்கள் போதிய அளவு படித்திருக்கமாட்டார்கள். இதைப்பற்றி, விசேஷமாக ஒவ்வொரு துறையைப் பற்றியும் இந்த கோர்ஸ் மூலம் தெரிந்துகொள்ள முடியும். இந்த கோர்ஸில் சேர்ந்து படிப்பதினால் ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவேதான் இதற்கான தனிக் கோர்ஸ் ஒன்று சட்டக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

[22nd November 1963

திரு. ஆ. கு. சுப்பையா : இதில் சேர்ந்துள்ள ஆண்கள் எத்தனை பேர்கள்? பெண்கள் எத்தனை பேர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

பிரசவ விடுமுறை (மருத்துவ அத்தாட்சி)

* 474 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் மணமான பெண்களும், ஆசிரியைகளும் பிரசவத்திற்கான விடுமுறையில் செல்லும்போதும், பின்னர் வேலையில் மீண்டும் சேரும்போதும் மருத்துவ அத்தாட்சி கேட்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வற்புறுத்தப்படுவதன் அவசியமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) The question does not arise.

திரு. முனு ஆதி : இப்படியில்லை என்று சர்க்கார் சொன்ன போதிலும், இதன் காரணமாக சம்பளம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா? ஆகவே பிரசவத்திற்காக மருத்துவ சர்டிபிகேட் தேவையில்லை என்பதை சர்க்கார் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசவத்திற்காக போகின்றவர்களுக்கு சர்டிபிகேட் அவசியமில்லை.

கலைக்கல்லூரி (அரியலூர்)

* 475 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூரில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவ உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : ஸார், அரியலூர் வட்டாரத்தில் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் 40 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே சர்க்கார் அங்கு ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்குமா? இல்லையென்றால் இனிமேலாவது அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?